**கவனிக்க.**- 2007.04.20 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ), பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன பிரசுரிக்கப்பட்டுள்ளது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1495 - 2007 අප්‍රේල් 27 වැනි සිකුරාදා - 2007.04.27

1495 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 271 |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, மே 04 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, ஏப்பிறல் 20 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## உப அஞ்சல் அதிபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2007

இலங்கை உப அஞ்சல் அதிபர் சேவையின் உப அஞ்சல் அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. 2007.05.22 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவர்களும் 45 வயதுக்கு மேற்படாதவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

**2. கல்வித் தகைமைகள்.**- (அ) சிரேட்ட பாடசாலை தராதரப் பத்திர பரீட்சையில் மொழி/இலக்கியம், எண்கணிதம் / தூயகணிதம்/ஆரம்ப கணிதம்/ வர்த்தக கணிதம் உட்பட குறைந்தது நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ; அல்லது

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி அல்லது சிங்களம்/ தமிழ்/ ஆங்கில இலக்கியம், கணிதம்/தூய கணிதம்/ஆரம்ப கணிதம்/வர்த்தக கணிதம்/ எண்கணிதம் உட்பட குறைந்தது நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்தி ; அல்லது

(இ) தேசிய பொதுக் கல்வி சான்றிதழ் பரீட்சையில் முதலாம் மொழி, கணிதம் உட்பட நான்கு பாடங்ளுக்கு குறையாது "ஏ" அல்லது "பி" தர சித்திகளும் மிகுதிப் பாடங்களுக்கு "சி" தர சித்திகளுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**- 1996.01.01 ஆந் திகதியில் பதில் நியமனத்தைக் கொண்டுள்ளவர்களும் கணிதம், மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்ததன் மூலம் கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவர் களுமான உப அஞ்சல் அதிபர்களும் இப் பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவார்கள்.

3. **வதிவிடத் தகைமைகள்.**-

(அ) *கடித ஒப்படைப்பு அலுவலகங்கள்.*- கடித ஒப்படைப்பு வசதிகளையுடையதும், செயற்பட்டுக் கொண்டிருப்பதுமான உப அஞ்சல் அலுவலகங்களின் விடயத்தில், அத்தகைய உப அஞ்சல் அலுவலகங்களின் விடயத்தில் அத்தகைய உப அஞ்சல் அலுவலகங்களின் ஒப்படைப்பு எல்லைகளுக்குள் விண்ணப்பதாரர் விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னராக குறைந்தது 5 ஆண்டுகள் வதிபவர்களாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) *ஒப்படைப்பு வசதியில்லாத அலுவலகங்கள்.*- ஒப்படைப்பு வசதி இல்லாதிருக்கும் உப அஞ்சல் அலுவலகங்களின் விடயத்திலும் புதிதாகத் திறக்கப்படும் உப அஞ்சல் அலுவலகங்கள் விடயத்திலும், விண்ணப்பங்கள் முடப்படும் திகதிக்கு முன்னராக குறைந்தது 5 ஆண்டுகள் அத்தகைய உப அஞ்சல் அலுவலகங்களில் சேவையாற்றும் கிராம அலுவலர் பிரிவில் அல்லது அடுத்துள்ள கிராம சேவகர் பிரிவுகளில் விண்ணப்பதாரர்கள் வசித்து வந்தமைக்கான சான்றுகளையுடையவர்களாக இருத்தல் வேண்டும் ;

(இ) மாநகர சபை, நகர சபை பகுதிகள் விடயத்தில், விண்ணப்ப தாரர்கள் சம்பந்தப்பட்ட மாநகர சபை, நகர சபைப் பகுதிகளின், விண்ணப்பம் முடப்படும் திகதிக்கு முன்னராக 5 ஆண்டுகள் வசித்தவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) புதிய குடியேற்றங்கள், புதிய குடியமர்வுகள், புதிய வீடமைப்புத் திட்டங்கள், புதிய கைத்தொழில் குடியேற்றங்கள் போன்ற இடங்கள் தொடர்பாக நிரந்தர வதிவிடக் காலம் அஞ்சல் அதிபதியினால் தீர்மானிக்கப்படும்.

*4.* **சம்பளமும் படிகளும்.**- உப அஞ்சல் அதிபர் சேவைக்கான சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :-

MNI-2006- 10 ஆவது ஒழுங்கிலிருந்து ரூபா 14,000 - 120 x 11 - 140 x 19 - ரூபா 16,760

(ரூபா 14,720 சம்பள அளவினை அடையுமுன்னராக வினைத் திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்)

சம்பளத்துடன், அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு கொடுபடற் பாலதான ஏனைய படிகளும், இடவதிசப் படியும் வழங்கப் படும். அஞ்சல் அதிபதியினால் தீர்மானிக்கப்படும் அடிப்படை யில் அலகுப் படியொன்று வழங்கப்படும். நிரந்தரமான உப அஞ்சல் அதிபர்கள் லீவுப் படிக்கும் உரித்துடையவராவர்.

5. **ஆட்சேர்ப்பு முறை.**- (i) உப அஞ்சல் அதிபர்கள் பதவிகள் வெற்றிடங்களாக உள்ள பகுதிகளில் அப் பதவிகளுக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

(ii) பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு ஒரு மொழியில் அதாவது சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலத்தில் தோற்றுதல் வேண்டும்.

*6.* **பரீட்சை ஒழுங்குவிதிகள்.**- (i) சகல பரீட்சார்த்திகளினதும் மொழி ஆற்றலையும் நுண்ணறிவையும் பரீட்சிக்கும் பொருட்டு மொழி ஆற்றல், உளச்சார்பு எனும் இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்ட பரீட்சையொன்றுக்கு சகல பரீட்சார்த்திகளும் தோற்றுதல் வேண்டும். பரீட்சையின் பொழுது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதற்கு தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ii) ***பாடத்திட்டம் :*** *மொழி ஆற்றல்.*- 1 1/2 மணித்தியாலம் கொண்ட வினாத்தாள், எண்ணங்களை வெளிப்படுத்துவதால் மொழி அறிவு, கிரகித்தற் திறமை, வாக்கிய அமைப்பு எளிய இலக்கணம் ஆகியவற்றை சோதிப்பதற்கென வடிவமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும் (100 புள்ளிகள்).

**குறிப்பு.**- பரீட்சார்த்திகளின் கையெழுத்து பரிசீல னைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

*உளச்சார்பு சோதனை.*- ஒரு மணித்தியாலம் கொண்ட வினாத் தாள், நெடுங் கூட்டல், சொல்லமைப்புத் திறன், பொது விவேகம் போன்றவற்றைக் கொண்டிருக்கும். (100 புள்ளிகள்)

(iii) இலங்கை உபஅஞ்சல் அதிபர் சேவையில் நியமனம் பெறுவதற்காக கருதப்படுவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தது 40 புள்ளிகள் பரீட்சார்த்திகள் பெறுதல் வேண்டும்.

(iv) 1996.01.01 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னராகவோ பதில் உப அஞ்சல் அதிபர்களாகக் கடமையாற்றி வருபவர்கள், போட்டிப் பரீட்சையில் அவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளுடன், பரீட்சையில் அவர்கள் பெற்றுக்கொண்ட மொத்த புள்ளிகளின் பின்வரும் அடிப்படையில் கணிக்கப்பட்ட வீதத்தைச் சேர்த்துக் கொள்வதற்கு உரித்துடையவராவர் :-

1 ஆண்டு தொடக்கம் 2 ஆண்டு கால சேவைக்கு - 10%
2 ஆண்டு தொடக்கம் 3 ஆண்டு கால சேவைக்கு - 15%
3 ஆண்டுக்குக் கூடுதலான சேவைக்கு - 25%

(v) ***நேர்முகப் பரீட்சை.-*** பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையில் உப அஞ்சல் அதிபர் பதவிக்கு போட்டியிடும் பரீட்சார்த்திகளில், அதிககூடிய புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையில் பரீட்சார்த்திகளின் சான்றிதழ்கள் வதிவிடத்தகைமைகள், அவர்களின் உடல் நலம் மட்டுமே வரிசீலனை செய்யப்படும் நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

(vi) இப்பரீட்சைக்கு பின்வரும் நகரங்களில் நடைபெறும் விண்ணப்பதாரிகள் தாங்கள் வதியும் பகுதிக்கு அண்மையில் உள்ள நகரங்களைத் தெரிவு செய்ய முடியும். விண்ணப்ப தாரிகள் குறைவாக உள்ள பரீட்சை நிலையங்களை இரத்துச் செய்ய இடமுண்டு :-

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 1 |
| கண்டி | 2 |
| காலி | 3 |
| இரத்தினபுரி | 4 |
| பதுளை | 5 |
| அனுராதபுரம் | 6 |
| மட்டக்களப்பு | 7 |
| யாழ்ப்பாணம் | 8 |

7. சேவை நிபந்தனைகள்.- (i) இப்பதவி நிரந்தரமானதும், ஒய்வூதியமுடையதுமாகும். நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டு காலத்துக்கு நியமனம் தகுதி காண் நிலையில் அமையும். விரும்பி இளைப்பாறும் வயது 55 ஆகும். கட்டாய இளைப்பாறும் வயது 60 ஆகும். தாபனக் கோவையின் நியதிகளின் பிரகாரம் 57 வயதுக்கு மேல் 60 வயது வரை ஆண்டு தோறும் சேவை நீடிப்பு வழங்கப்படலாம்.

(ii) உப அஞ்சல் அதிபர் சேவை இடமாற்றம் உரிய மாவட்டத்துக்குள் மட்டுமாகும்.

(iii) தேர்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி 7,500 ரூபா பிணைப் பணமாக செலுத்தல் வேண்டும். இத் தொகையில் அரைவாசியை நியமனத்தை ஏற்பதற்கு முன்னராகச் செலுத்துதல் வேண்டும். மிகுதி அரைவாசி உப அஞ்சல் அதிபரின் சம்பளத்திலிருந்து மாதாந்தம் தவணைப் பணமாக அறவிடப்படும்.

(iv) அஞ்சல் அதிபரினால் தீர்மானிக்கப்பட்ட மத்திய இடமொன்றில் உப அஞ்சல் அலுவலகத்தை அமைப்பதற்கு போதியளவு இடவசதியை தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி வழங்குதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட உப அஞ்சல் அதிபரானவர், அஞ்சல் அதிபதியோ அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரோ அறிவித்தல் வழங்கிய மூன்று மாத காலத்துக்குள் உப அஞ்சல் அலுவலக இடத்தை மாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

(v) லீவு எடுக்கும் போது கடமையாற்றுவதற்கு பதிலாளை வழங்குவது உப அஞ்சல் அதிபரின் பொறுப்பாகும்.

(vi) தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி உடல்நல ஆரோக்கியம் உடையவராக இருப்பதுடன் மருத்துவச் சோதனை யொன்றுக்கு தோற்றுதலும் வேண்டும்.

(vii) தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை செயற்படுத்துவதற்கும், காலத்துக்குக்காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்கு நியதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் ஒழுகி நடக்குமாறு வேண்டப்படுவர்.

8. (i) இந்த அறிவித்தல் இறுதியின் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கமைய இலக்கம் 1 இலிருந்து 7 வரை உள்ளவற்றை முதலாவது பக்கத்தில் உள்ளடக்கக்கூடியதாக A4 அளவுள்ள தாளில் விண்ணப்பம் தயாரிக்கப்படுதல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட படிவம் சம்பந்தப்பட்ட அஞ்சல் அலுவலகங்களின் பகுதிக் கண்காணிப்பாளரை 2007.05.22 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ அடையக்கூடியதாக பதிவு அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் விண்ணப்பங்களை மூடும் திகதிக்குப் பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

(ii) அரசாங்க சேவையிலுள்ள பரீட்சார்த்திளின் கையொப்பங்கள் திணைக்களத் தலைவரினால் அல்லது அவரினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும். ஏனைய பரீட்சார்த்திகளின் கையொப்பங்கள் சமாதான நீதவான், சத்திய பிரமாண ஆணையானர், அரசாங்க பாடசாலையின் அதிபர், ஆயுதப் படைகளின் ஆணை பெற்ற உத்தியோகத்தர்கள், பொலிஸ் சேவையிலுள்ள மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் பௌத்த விகாரையின் விகாராதிபதிகள் பொது சமயத் தலைகர்களால் அத்ததாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவத் தலையங்கத்தில் (மேல்) குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் உரிய முறையில் சிங்களம்/ தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியையும் சேர்க்கவும்.

9. **பரீட்சைக் கட்டணம்.-** பரீட்சைக் கட்டணம் 200 ரூபாவாகும். இந்தப் பணத்தை அண்மையாகவுள்ள அஞ்சல் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படி வத்திலுள்ள தொடர்பான கூட்டில் திடமாக ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக்கு செலுத்தப்பட்ட கட்டணமோ அதனொரு பகுதியோ எச்சூழ்நிலையின் கீழும் மீளளிக்கப்படமாட்டாது.

10. (1) ஒவ்வொரு பரீட்சார்த்தியும், அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பித்த மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அவர் பரீட்சைக்குத் தோற்றும் மொழியை எச் சூழ்நிலையின் கீழும் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(ii) பரீட்சார்த்திகள், அவர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அரசாங்க பரீட்சைகளுக்கு ஏற்புடையதான பொது விதிகளுக்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவார்கள்.

11. இத்திணைக்களத்தின் உத்தியோகத்தர் எவரையாவது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செல்வாக்குக்குட்படுத்த முயலும் பரீட்சார்த்திகள் தகுதியற்றவர்களாக்கப்படுவார்கள்.

12. உப அஞ்சல் அலுவலகத்தை அமைப்பதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ள கட்டிடம் அமைந்திருக்கும் இடத்தைக் காட்டும் சாதாரண வரைவு படமொன்றினை சகல பரீட்சார்த்திகளும் தங்களின் விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும்.

13. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் மூடப்பட்ட திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமைக்கான அறிவிப்பினை பரீட்சார்த்தி யொருவர் பெறத் தவறுவாராயின் உடனடியாக பகுதி அஞ்சல் அலுவலகங்களின் கண்காணிப்பாளரின் கவனத்துக்குக் கொண்டு வருதல் வேண்டும். விண்ணப்பங்கள் அஞ்சல் அலுவலகங்களின் பகுதிக் கண்காணிப்பாளர், முகவரியிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். அவரின் சொந்தப் பெயரில் அனுப்பப்படுதலாகாது.

14. விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவத்தில் ஏதாவது பொய்யான தகவல்கள் கொடுக்கப்பட்டிருப்பது தெரியவரின் அவர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன் தெரியவரும்பட்சத்தில் அதன் காரணத்தால் பதவிக்கு தகுதியற்றவராகக் கருதப்படுவதற்கும், தெரிவு செய்த பின் தெரியவரும் பட்சத்தில் சேவையிலிருந்தும் நீக்கப்படுதற்கும் ஆளாவார்.

15. இவ்வறிவித்தலில் உள்ளவற்றை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

கே. ஏ. எஸ். சேனாதீர,
அஞ்சல் மா அதிபதி.

அஞ்சல் தலைமையகம்,
310, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2007.04.11.

### மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

உப அஞ்சல் அதிபர்களை சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2007

COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT OF SUB POST MASTERS – 2007

விண்ணப்பப்படிவம் இலக்கம் 1 தொடக்கம் 7 வரை முதல் பக்கத்தில் தயாரிக்கவும்.

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :-

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டுக்குள் குறிக்கவும்)

1. பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பரீட்சை நிலையம் :-----

நிலைய இலக்கம்

2. (i) முதல் எழுத்துக்களுடன் பெயர் :-----
(உதாரணமாக : SILVA A. B.)

(ii) முதல் எழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :-
(தமிழில்) :-----
(ஆங்கிலதில்) :-----

3. (i) நிரந்தர முகவரி :-----
(பரீட்சை அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப் படும்)

(ii) திணைக்களத்தில் சேவையாற்றுபவரென்றால் அலுவலக முகவரி :-----

4. (i) வெற்றிடம் உள்ள உப அஞ்சல் அலுவலகம் :-----
(ii) உப அஞ்சல் அலுவலகத்தின் இலக்கம்
(அறிவித்தலின் பிரகாரம்)

5. ஆணா/பெண்ணா ? (பெண்-1, ஆண்-0)
(உரிய இலக்கத்தை கூட்டுக்குள் குறிக்கவும்)

(அ) பிறந்த திகதி :-

ஆண்டு :----- மாதம் :----- திகதி :-----

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் வயது (22.05.2007 ஆந் திகதியில்) :

வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----

6. இலங்கை பிரஜை எனில் பிறப்பினாலா? பதிவினாலா? :-----

7. (i) உப அஞ்சல் அதிபர் வெற்றிடம் உள்ள பிரதேசத்தில் ஐந்து வருடங்களோ அல்லது அதற்கு அதிகமான காலம் நீங்கள் நிரந்தரமாக வசித்துள்ளீர்களா? :-----

(ii) நீங்கள் வதியும் கிராம அலுவலர் பிரிவும் அதன் இலக்கமும் :

(iii) எப்போதிலிருந்து நீங்கள் அங்கு வசிக்கின்றீர்கள் ? :-----

(iv) நீங்கள் வதியும் வீட்டுக்கு கடித ஒப்படைப்புச் செய்யும் அஞ்சல் அலுவலகத்தின் பெயர் :-----

(v) விவசாயக் குடியேற்ற அமைப்பில் திறக்கப்படவுள்ள அல்லது அதில் அமைந்துள்ள அஞ்சல் அலுவலகம் என்றால் அந்தக் குடியேற்றத்திட்டத்தில் நீங்கள் வசிப்பதற்கு சமுகமளித்த திகதி :-----

(vi) குடியேற்றக்காணியின் சொந்தக்காரர் நீங்கள் இல்லை என்றால் குடியேற்றவாசியுடன் உள்ள தங்களது தொடர்பு :-----

8. (i) அறிவித்தலின் 6 (iv) ஆம் பந்தியில் உங்களுக்கு அனுசரணையாக உள்ள புள்ளிக்கு உரித்துள்ளதா? :-----
(ii) அப்படி என்றால் அதைப்பற்றிய விபரம் :-----

9. (i) கல்வித் தகைமைகள் :-

சித்தியடைந்த பரீட்சையின் பெயர் :-----
பரீட்சை நடைபெற்ற ஆண்டும் மாதமும் :-----
சுட்டிலக்கம் :-----
பரீட்சை நிலையம் :-----
இலக்கம் :-----

| சித்தியடைந்த பாடங்கள் | பெறப்பட்ட சித்திகள் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

சித்தியடைந்த பரீட்சையின் பெயர் :-----
பரீட்சை நடைபெற்ற ஆண்டும் மாதமும் :-----
சுட்டிலக்கம் :-----
பரீட்சை நிலையம் :-----
இலக்கம் :-----

| சித்தியடைந்த பாடங்கள் | பெறப்பட்ட சித்திகள் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

(ii) வேறு கல்வித் தகைமைகளிருப்பின் விபரங்கள் :-----

10. உப அஞ்சல் அலுவலகம் தற்பொழுது அமைந்துள்ள இடத்துக்கோ அல்லது உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்துக்கோ 200 யாருக்குள் உப அஞ்சல் அலுவலகம் இயங்குவதற்காக பொருத்தமான கட்டடம் உங்களுக்குத் தேட முடியுமா? அமைவிடம் பற்றிய விபரத்தை வரைபடம் மூலம் காட்டவும். அதை இதனுடன் இணைக்கவும் :-----

11. நீங்கள் விடுமுறை பெறும் சந்தர்ப்பத்தில் உங்களுக்காக கடமை புரிவதற்காக பதிலாளர்கள் பதிவுசெய்வதற்கு (உப அஞ்சல் அதிபதிக்கு இருக்க வேண்டிய தகைமை உள்ளவரை உங்களால் வழங்க முடியுமா?) :-----

12. நீங்கள் ஏதாவது குற்றத்துக்காக நீதிமன்றத்தால் தண்டனை பெற்றுள்ளீர்களா? தண்டனை பெற்றுள்ளீகளானால் வழக்கு இலக்கம் பெற்ற தண்டனை விபரம் தரவும் :-----

13. (i) நீங்கள் இதற்கு முன் அஞ்சல் திணைக்களத்திலோ அரசாங்கத்தின் வேறு நிறுவனங்களிலோ தொழில் புரிந்துள்ளீர்களா? :-----
(ii) அத்தொழில் சம்பந்தமான விபரங்களையும் அதிலிருந்து விலகியதற்கான, விலக்கியமைக்கான காரணம் என்ன? :-----

14. உங்களுக்கு 3,750 ரூபா பணம் பிணைப்பணமாக வைப்பிலிட முடியுமா ? :-----

15. விண்ணப்பதாரியின் நடத்தை மற்றும் குணநலன்கள் பற்றி சான்றுபகரும் இருவரின் பெயர்களையும் முகவரிகளையும் குறிப்பிடவும்.

1. :-----
2. :-----

16. பரீட்சைக் கட்டணம் செலுத்திய அஞ்சல் அலுவலகம் :-----

பரீட்சைப் பற்றுச்சீட்டு இலக்கம் :-----
திகதி :-----

| பரீட்சைப் பற்றுச்சீட்டை அகற்றாதவாறு ஒட்டவும். |
|---|

17. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :-**

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதும் எனக் குறிப்பிடுகிறேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது பொய் என்றோ தவறு என்றோ தெரிவுசெய்யப்படுவதற்கு முன் தெரியவரும் பட்சத்தில் நான் தகுதியற்றவன் என்றும் பதவிக்கு நியமித்த பின் தவறு தெரியவரும் பட்சத்தில் நட்டஈடு இல்லாமல் உடனடியாக எனது சேவை நிறுத்தப்படும் என்பதை நான் நன்கறிவேன்.

இந்தப் பரீட்சையின் சகல நிபந்தனைகளையும் கடைப்பிடித்து நடப்பேன். இதில் குறிப்பிட்ட தகவல்களை பின்னர் மாற்ற மாட்டேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----

18. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .................................... அவர்களை தனிப்பிட்ட ரீதியாக தெரியும் என்றும் அவர் எனது முன்னிலையில் ..................... ஆந் திகதி அவருடைய கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப் பெயர் :-----
பதவி :-----
(உத்தியோகபூர்வ முத்திரை)
முகவரி :-----
திகதி :-----

19. ***திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (உரித்தென்றால் மட்டும்):***

இவ்விண்ணப்பத்தை அனுப்பும் ............................................ பெயரையுடைய விண்ணப்பதாரி.........................ஆந் திகதி தொடக்கம் இவ்வலுவலகத்தில் சேவையாற்றுபவரென்றும் அவருடைய கடமை நடத்தை நிரந்தரமாக திருப்தி உடையதென்றும் மேற்குறிப் பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் இவ்வலுவலகத்திலுள்ள பதிவேடுகளை நான் தனிப்பட்ட முறையில் பரீட்சித்துப் பார்த்தேன் என்றும் அவைகள் சரியானதென்றும்......................ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப் படுத்துகிறேன்.

-----,
திணைக்களத் தலைவரின் அல்லது அவர்
அதிகாரமளித்த அலுவலரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப் பெயர் :-----
பதவி :-----
(உத்தியோக முத்திரையைப் பதிக்கவும்)
முகவரி :-----
திகதி :-----

**கொழும்பு மாவட்டம்**
***பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் பிரிவு***

*வெற்றிடம் உள்ள உப அஞ்சல் அலுவலகங்கள் :*

1. நுகதண்ட
2. புவக்பிட்டிய
3. சாலாவ
4. அத்திடிய
5. களுபோவில தெற்கு
6. தெஹிவளை நகர சபை
7. ஸ்ரீ சரணங்கர வீதி
8. கல் விகாரை வீதி
9. நவகமுவ பத்திரிபுர
10. போமிரிய
11. ஜள்தரஹேன்பிட்ட
12. ஹோகந்தர
13. மாதிவெல
14. தளங்கம வடக்கு
15. ஜயவடனகம
16. கங்கொடவில
17. கொஹுவளை
18. தளபத்பிட்டிய
19. ஒறுகொடவத்த
20. அன்டர்சன் தொடர்மாடி
21. பொல்ஹென்கொட
22. நாரஹேன்பிட்ட
23. நாவல
24. கொழும்பு பெரியாஸ்பத்திரி
25. பாமன்கடை
26. தெளவள
27. இரத்மலானை வடக்கு
28. பொறுப்பன விஜயபுர
29. சிறிமல் உயன
30. ஹபறகட
31. முல்லேகம
32. கொறளவல்ல
33. அங்குலான
34. கட்டுபெத்த
35. கந்தபான்கொட
36. கொறகல
37. பட்டுகம்பல
38. அங்கம்பிடி
39. கொஸ்ஹேன சந்தி
40. போக்குந்தர
41. சித்தமுல்ல
42. தெல்தர
43. ஆதுருப்பு வீதி
44. கொழும்பு கச்சேரி
45. ஆமர் வீதி
46. பேஸ்லையின் வீதி
47. கோதமி வீதி
48. வித்தோதய பல்கலைக்கழகம்
49. நாவின்ன

**கம்பஹா மாவட்டம்**
***பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் பிரிவு***

*வெற்றிடம் உள்ள உப அஞ்சல் அலுவலகங்கள் :*

1. அளுத்தப்பொல
2. ஆண்டியம்பலம
3. படல்கம
4. பம்புகுழிய
5. பத்கம்முல்ல
6. பொக்கலகம
7. பொல்லேகல
8. போமுணுவ
9. புளுகஹகொட
10. போபிட்டிய சந்தி
11. தங்ஹவெல
12. தழுபொத்த
13. போளகல
14. போபாகம
15. தழுவகொட்டுவ
16. தெஹிகஹஹேன
17. தெவமொட்டாவ
18. துனகஹ
19. தூவ
20. எளுவாபிட்டிய
21. எப்பாமுல்ல
22. இதிபரபே
23. குறவன
24. கொங்கிதொட்ட
25. ஹப்புகொட
26. ஹெய்பத்துடுவ வடக்கு
27. கஹடோவிட்ட
28. கலகெடிஹேன
29. களல்பிட்டிய
30. களோட்டுவாவ
31. கட்டுவல்லேகம
32. கப்புகொட
33. கீனவள
34. கெஹெல் அல்ல
35. கொஸ்ஸின்ன
36. கொட்டதெனியாவ
37. கொட்டறுப்பே

38. குடஹக்கபொல
39. குறண போளவலான
40. குறுகுளாவ
41. மல்வத்துகிரிப்பிட்டிய
42. மகலேகொட
43. மடித்தகம
44. மயிலவளான
45. மஹர
46. மடகொட்டுவ
47. மாறபொல
48. மாதம்மன
49. மாதெல்கமுவ
50. முத்தரகம
51. முதுங்கொட.
52 முன்னக்கரய
53. முருதான
54. நெதகமுவ
55. நிகஹட்டிகந்த
56. நில்பனாகொட
57. பாலுகம
58. பத்தளகெதர
59. பிங்கமுவ
60. பீல்லவத்த
61. பேலியகொடவத்த
62. பொல்ஹேன
63. போறுதொட்ட
64. ரதாவடுன்ன
65. சியாம்பளப்பே
66. தெல்வத்த சந்தி
67. திஹாரிய
68. தித்தபத்தர
69. திம்பிரிகஸ்கட்டுவ
70. வணவாசல
71. வல்பொல
72. வலிஹேன சந்தி
73. வேபொட
74. வேகோவ்வ
75. வெலிய
76. வேரஹர
77. யாகொட
78. உடமாபிட்டிகம
79. உஸ்வட்டகெய்யாவ
80. வத்தமுல்ல

**களுத்துறை மாவட்டம்**
***பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் பிரிவு***

*வெற்றிடம் உள்ள உப அஞ்சல் அலுவலகங்கள் :*

1. தொபகொட
2. ஹொறணமாஹேன
3. முணகம
4. ஹொரண வடக்கு
5. மில்லேவ
6. கணன்வில
7. மொரகஹஹேன
8. அரம்பனாகொல்ல
9. பறகஸ்தொட்ட
10. மிவனபாலன
11. ஹொரணகடை வீதி
12. தொட்டவத்த
13. வளான
14. எளுவில சந்தி
15. பெக்கேகம
16. பள்ளிமுல்ல
17. அறுக்கொட
18. குறுப்புமுல்ல
19. குடாஹீனட்டியங்கல
20. களுத்துறை தியகம
21. சபுகஹவத்த
22. கொஹோலான
23. எத்தகம
24. பொளொஸ்ஸகம
25. களப்புகம
26. புஹாம்புகொட
27. பொலிஸ் பயிற்சிக் கல்லூரி
28. வந்தனாகொட
29. எகொடவத்த
30. மாளிகாஹேன
31. கிரிகொள
32. மோள்காவ
33. வெயங்கல்ல
34. வெதவத்த
35. தனவள கீனியாவள
36. திவளகட
37. போத்தலேகம
38. பறகொட
39. தெல்மல்ல
40. ஹிரிகல்கொடல்ல
41. பொத்துவிலபுர
42. கெஸ்ஹேன படே
43. முங்ஹேன
44. ரெமுரன
45. ஹடிகல்ல குடியேற்றம்
46. பொந்துபிட்டிய
47. ரேறுகான குடியேற்றம்
48. வீதியகொட
49. பொத்துபிட்டிய
50. நாரவில
51. ஹல்வள
52. இத்தகொட
53. பரேய்கம
54. வெட்டும கடை சந்தி

**இரத்தினபுரி மாவட்டம்**

